# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044319

1. District / மாவட்டம்: நாமக்கல் — PS / காவல்நிலையம்: ஊ.த.க. பிரிவு நாமக்கல் — Year / ஆண்டு: 2022 — FIR No. / மு.த.அ. எண்: 2/AC/2022 — Date / நாள்: 27/09/2022

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act, 1988 as amended, — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: in 2018 — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள் : Date from / நாள் முதல் — Date to / நாள் வரை
Time Period / நேர அளவு : Time from / நேரம் முதல் — Time to / நேரம் வரை
1) 2-6-2022
2) 28-07-2022
3) 29-07-2022 - சுமார் 15.30 மணிக்கு
4) 06-08-2022 - சுமார் 11.30 மணிக்கு
5) 22/09/2022 சுமார் 13.25 மணிக்கு
6) 24/09/2022 சுமார் 12.00 மணிக்கு
7) 26/09/2022 சுமார் 13.45 மணிக்கு

(b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 24/09/2022 — Time / நேரம்: காலை 11.00 மணிக்கு

(c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: Volume - IV — Time / நேரம்:
1) 24-09-2022 காலை 11 மணிக்கு
2) 26.09.2022 மதியம் 13.00 மணிக்கு
3) 26-09-2022 மதியம் 14.00 மணிக்கு
4) 27-09-2022 காலை 8.30 மணிக்கு

4. Type of Information : Written/ Oral ✓ : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — வாய்மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: 1) சுமார் 3 கி.மீ வடமேற்கு, உதவி

Beat Number / முறைக் காவல் எண் : — (b) Address / முகவரி: ஆணையர் அலுவலகம், இந்து சமய அறநிலையத்துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், நாமக்கல்
2) சுமார் 12 கி.மீ வடகிழக்கு அருள்மிகு பெரியசாமி திருக்கோவில், புதுக்கோம்பை,

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District / மாவட்டம் : நாமக்கல் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு. பா. அண்ணாதுரை — (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர் : திரு. பாலன்

(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு : வயது - 39 — (d) Nationality / நாட்டினம் : இந்தியன் — (e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —

Date of Issue / வழங்கப்பட்ட நாள் : — — Place of Issue / வழங்கப்பட்ட இடம் : —

(f) Occupation / தொழில் : பூசாரி — (g) Address / முகவரி : க.எண். 10/1 மலையாளத்தெரு, பு.புதுக்கோம்பை முத்துக்காபட்டி, நாமக்கல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. ப. ரமேஷ், உதவிஆணையர், உதவிஆணையர் அலுவலகம், இந்து சமய அறநிலையத்துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், நாமக்கல்.
2) திரு லட்சுமிகாந்தன், செயல் அலுவலர், அ/மி பெரியசாமி திருக்கோயில் புதுக்கோம்பை, (கூடுதல் பொறுப்பு : அ/மி [illegible] திருக்கோயில் [illegible]) நாமக்கல் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

* GCP 240 34(Type 2) 90,000 Cps 21.3.18(HCL 12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

[illegible]

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் கோ. [illegible] பதவி காவல் ஆய்வாளர் பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

B. அண்ணாதுரை 27.9.22.

[signature] 27/09/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

27/09/2022
10-30 மணிக்கு

Name பெயர் கோ. [illegible]
Rank நிலை ______ No எண் ______
காவல் ஆய்வாளர்,
[illegible]
நாமக்கல்.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.18(HCL-12)p.2

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/AC/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

26.09.2022-ஆம் தேதி திங்கட்கிழமை பகல் 14.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, புகார்தாரர் திரு.B.அண்ணாதுரை, (வயது-39), S/o.பாலன், கதவு எண்.10/1 மலையாளத்தெரு, பு.புதுக்கோம்பை, முத்துக்காபட்டி, நாமக்கல் மாவட்டம் என்பவர் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி வாய்மொழியாக சொன்ன புகாரின் விபரம் பின்வருமாறு:-

நான் புதுக்கோம்பை மலையாள தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எங்கள் குடும்பம் பரம்பரையாக நாமக்கல் மாவட்டம் புதுக்கோம்பை அருள்மிகு ஒட்டடி பெரியசாமி திருக்கோவில் பூசாரியாக இருந்து வருகிறோம். முத்துக்காப்பட்டி அருள்மிகு பெரியசாமி கோவில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது. கோவிலின் செயல் அலுவலராக திரு.லட்சுமிகாந்தன் அவர்களும், நாமக்கல் மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையராக திரு.ப.ரமேஷ் அவர்களும் பணிபுரிகிறார்கள். எனது அப்பாவிற்கு பிறகு கடந்த 2011 முதல் நான் கோவில் பூசாரியாக பூஜை செய்து வருகிறேன். எங்கள் குடும்பத்தை சேர்ந்த எனது சித்தப்பா அய்யாவு மகன் ரகுவும் நானும் தான் அப்போதில் இருந்து பூஜை செய்து வருகிறோம். எங்கள் இரு குடும்பமும் வாரம் ஒரு முறை என்ற வகையில் பூஜை செய்தோம். 2010-க்கு முன்பு எங்களது இரண்டு குடும்பம் மற்றும் ராஜு, பெரியசாமி ஆகிய இரண்டு குடும்பம் சேர்த்து 4 குடும்பங்கள் பூஜை செய்தார்கள். கடந்த 2021 அக்டோபர் மாதம் முதல் ராஜு-வும் பூஜை செய்ய செயல் அலுவலர் திரு.லட்சுமி காந்தன உத்தரவிட்டார். அது முதல் மூன்று பேர் பூஜை செய்து வந்தோம். கடந்த 02.06.2022 அன்று உதவி ஆணையர் திரு.ரமேஷ் அவர்கள் முறை பூசாரிகள் மற்றும் புதியதாக பூசாரி முறை கேட்டவர்களை அவரது அலுவலகத்திற்கு அழைத்து விசாரித்து பின்னர் கீர்த்தனன், பூபாலன் மற்றும் இளவரசன் ஆகியோரையும் எங்களது இறந்துபோன பங்காளி பெரியசாமி குடும்பத்தாரையும் பூசாரியாக நியமித்தார். மேலும் அப்போது ஒவ்வொரு வாரமும் முறை முடிந்தவுடன் வாரம் ரூ.7,000/- பூஜை செய்பவர்கள் தனக்கு மாமூல் கொடுத்து விடவேண்டும். அதற்கு

ஒத்துக்கொள்ளவில்லை எனில் அனைவரையும் பூசாரியாக இருக்க அனுமதிக்க மாட்டேன் என்று சொன்னார். மேலும் இனிமேல் கோவில் செயல் அலுவலர்தான் இதுசம்பந்தமாக உங்களிடம் பேசுவார் என்று சொன்னார். அதுமுதல் மொத்தம் ஏழு குடும்பம் சார்பாக வாரம் ஒரு முறை ஒரு குடும்பத்தார் பூஜை செய்து வருகிறோம். ஒரு வாரம் என்பது சனிக்கிழமை முதல் வெள்ளிகிழமை வரை ஆகும். எங்களுக்கு மாத சம்பளம் எதுவுமில்லை. கோவிலுக்கு வரும் பக்தர்கள் பூஜை தட்டில் போடும் பணம் தான் எங்களது வருமானம் ஆகும். எங்களது பங்காளி அண்ணன் பெரியசாமி குடும்பம் சார்பாக அவரது மருமகன் அன்பரசு அவர்களும் பூசாரியாக பூஜை செய்து வருகிறார். கடந்த 28.07.2022 ஆம் தேதி ஆடி அமாவாசை அன்று கோவிலுக்கு வந்த உதவி ஆணையர் திரு.ரமேஷ் அவர்கள் அன்றைய தினம் பூஜை வேலை செய்துவந்த எனது சித்தப்பா மகன் ரகுவிடம் நல்ல கூட்டம் வருகிறதே, உங்களுக்கும் நல்ல வருமானம் வருகிறதே, இனி அமாவாசை மற்றும் விசேச நாட்கள் வரும் வாரம் பூஜை செய்பவர்கள் ரூ.10,000/- மாமூல் கொடுக்க வேண்டும் என்றும் நாளை அலுவலகம் வந்து பாருங்க என்று சொன்னதாக ரகு என்னிடம் சொன்னார். ஆகையால் அடுத்த நாள் 29.07.2022 ஆம் தேதி மதியம் சுமார் 3.30 மணிக்கு நானும் ரகுவும் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம் உள்ள புதிய ஆட்சியர் அலுவலக கட்டிடத்தில் செயல்பட்டு வரும் இந்து சமய அறநிலையத்துறை அலுவலகம் சென்றோம். உதவி ஆணையர் திரு.ரமேஷ் அவர்கள் திருச்செங்கோடு சென்றுள்ளதாகவும், அங்கிருந்த எங்களது கோவில் செயல் அலுவலர் திரு.லட்சுமிகாந்தன் அவர்கள் AC என்னையே உங்களிடம் பேசி அனுப்பச்சொல்லிவிட்டார் என்று சொல்லி, எங்களிடம் உங்க இரண்டு பேர் மற்றும் உங்க பங்காளி லட்சுமி குடும்பம் ஆகிய மூன்று பேர் பணத்தையும் முறை முடிந்தவுடன் ஒன்றாக கொடுத்துவிடவேண்டும். இந்த வாரம் அமாவாசை என்பதால் இந்த வாரம் பார்த்தவங்க ரூ.10,000/- கொடுத்துவிடவேண்டும் என்று தெரிவித்தார். ஒழுங்காக பணம் கொடுத்தீங்கனா உங்களை நிரந்தரமாக அரசு சார்பாக பூசாரியாக்க பரிந்துரை செய்வேன் என்று AC சொல்ல சொன்னார் என்றும் சொன்னார். அவர்கள் கேட்ட பணத்தை கொடுக்காவிட்டால் எங்களை பூஜை செய்ய அனுமதிக்க மாட்டார்கள் என்பதால், எனது முறை 05.08.2022 அன்று முடிந்தவுடன், என்னுடையது, ரகுவுடையது மற்றும் லட்சுமி மருமகன் அன்பரசு ஆகியோருக்குரிய அந்த முறை மாமூல் தலா ரூ.7,000/- வீதம் மொத்தம் ரூ.21,000/-ஐ செயல் அலுவலர் திரு.லட்சுமிகாந்தன்

அவர்களிடம் 06.08.2022-ஆம் தேதி பகல் சுமார் 11.30 மணிக்கு நைனாமலையில் அவரது அலுவலகத்திற்கு வெளியில் வைத்து கொடுத்தேன். அதை பெற்றுக்கொண்டு அவர் ஏன் அம்மாவாசை வாரத்திற்கு ரூ.10,000/- இல்லை என்று கேட்டார். நான் வருமானம் அந்தளவு இல்லைங்க சார், என்று சொன்னேன். அதற்கு AC ஒத்துக்கமாட்டார், சரி நான் பேசுகிறேன் என்று சொன்னார். அதன் பின்னர் எங்களது மூன்று பேரின் முறை கடந்த 23.09.2022-ஆம் தேதி அன்று முடிந்தது. 22.09.2022-ஆம் தேதி மதியம் சுமார் 01.25 மணிக்கு எங்களது கோவில் செயல் அலுவலர் திரு.லட்சுமிகாந்தன் என்னை அவரது செல்போன் எண்.9944772681 இல் இருந்து எனது செல்போன் எண் 7708951746 இல் தொடர்புகொண்டு எங்களது பூஜைக்கான முறை குறித்தும், எனக்கும், சித்தப்பா மகன் ரகு, பங்காளி பெரியசாமி மனைவி லட்சுமி ஆகியோரின் முறை குறித்து கேட்டார். நான் நாளை தான் எனக்கு முறை முடிகிறது என்று சொன்னேன். அதற்கு அவர் முதலில் லட்சுமி, அடுத்தது ரகு, அதன்பின் நீங்களா என்று கேட்டார், நான் ஆம் என்று சொன்னேன். அவர் எங்கள் முறை முடிந்தவுடன் நாங்கள் கொடுக்க வேண்டிய மாமூல் பணம் குறித்தும் கேட்டார். அதற்கு நான் வருமானம் சரியாக இல்லை, கூட்டமே இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் இதெல்லாம் AC ஏற்றுக்கொள்ளமாட்டார், நீங்க கொடுத்தாகனும், புதியதாக வந்தவங்க எல்லாம் கொடுக்கிறாங்க, AC கேட்கிறார் இல்லையென்றால் நான் கேட்க மாட்டேன். நீங்க லேட் பண்ணினா, நான் பணம் வாங்கி வைத்துக்கொண்டு அவருக்கு கொடுக்காமல் இருப்பதாக என் மேல் சந்தேகப்படுகிறார், அதனால் இந்த வாரம் வந்து பாருங்க, நீங்க நேரில் வாங்க வரும்போது நான் நேரில் சொல்றேன் என்றும், பின்னர் எப்ப பார்க்க வருகிறீர்கள் என்று கேட்டுவிட்டு சனிக்கிழமை வரச்சொன்னார். பின்னர் 23.09.2022-ஆம் தேதி பகல் சுமார் 2.45 மணிக்கு போன் செய்து அண்ணாதுரை பார்க்க வரவில்லையா என்று கேட்டார். நான் இன்னைக்குதான் டியூட்டி முடிகிறது என்று சொன்னேன். அதற்கு அவர் சரி நாளைக்கு வாங்க என்று சொன்னார். அதன் பின்னர் அன்று மாலை சுமார் 3.15 மணிக்கு போன் செய்து எங்கள் கோவில் நிலம் குறித்து கேட்டார். நான் விளக்கம் சொன்னேன். பின்னர் செயல் அலுவலர் ஏற்கனவே அறிவுறுத்தியபடி நான் 24.09.2022-ஆம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு. அவரை தொடர்புகொண்டபோது அலுவலகம் வரச்சொன்னார். அவரது அலுவலகம் நைனாமலையில் அமைந்துள்ளது. எனக்கு உதவி ஆணையர் அவர்கள் செயல்

அலுவலர் மூலமாக பூசாரிகளுக்கு பக்தர்கள் தட்டத்தில் காணிக்கையாக போடும் பணம் எங்களது வருமானம், அந்த வருமான பணத்தில் இருந்து மாமூல்/ லஞ்சமாக கேட்பதை எனக்கு கொடுக்க விருப்பமில்லாததால் 24.09.2022 அன்று காலை சுமார் 11.00 மணிக்கு நான் நாமக்கல் லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகம் வந்து எங்கள் கோவில் உதவி ஆணையர், செயல் அலுவலர் மூலம் லஞ்சம் கேட்டு பெறுவது குறித்து காவல் ஆய்வாளரிடம் புகாராக தகவல் சொன்னேன். காவல் ஆய்வாளர் அவர்கள் என்னிடம் நடந்த சம்பவத்தை கேட்டு விபரம் தெரிந்து கொண்டு, நான் செயல் அலுவலரை சந்திக்க செல்லும்போது எங்களுக்குள் நடைபெறும் உரையாடலை செல்போனில் பதிவு செய்ய அறிவுறுத்தினார்கள். நான் அவர் செல்போனை வாங்கி சுவிட்ச் ஆப் செய்துவிட்டுதான் பேசுவார் என்று சொன்னேன். ஆகையால், காவல் ஆய்வாளர் அலுவலக குரல் பதிவு கருவி மூலம் பதிவு செய்ய வேண்டும் என்று சொல்லி என்னுடன் காவலர் இருவரை அனுப்பி அவர் மூலம் நான் நைனாமலை சென்று செயல் அலுவலரை சந்திக்க செல்லும்போது என்னிடம் குரல் பதிவு கருவியை ஆன் செய்து கொடுத்தனுப்பினார். பின்னர் நான் எங்களது குடும்பத்தை சேர்ந்த பங்காளிகள் ரகு, அன்பரசு ஆகியோரையும் அழைத்துக்கொண்டு செயல் அலுவலரை சந்திக்கச் சென்றேன். அன்று காலை சுமார் 11.40 மணிக்கு செயல் அலுவலரிடம் போன் மூலம் பேசி அவர் சொன்ன இடமான நைனாமலையில் உள்ள சேந்தமங்கலம் ரோட்டிற்கு சென்றோம். அங்கு வந்த செயல் அலுவலர் அவர்கள் மூன்று பேரும் ஏன் வந்தீங்க என்று கேட்டுவிட்டு என்னை மட்டும் தனியாக அழைத்துச் சென்று எனது செல்போனை வாங்கி ஆப் செய்துள்ளதா என்று பார்த்துவிட்டு, அவரது பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு, என்னிடம் பணம் கொண்டுவரவில்லையா என்று கேட்டார். நான் நீங்க மூன்று பேர் பற்றி சொல்லி நேரில் பார்க்க சொன்னதால் வந்தோம் என்று சொன்னேன். அதற்கு அவர் போனில் அவ்வளவுதான் சொல்லமுடியும், பணம் கொண்டு வரவில்லையா என்று கேட்டார். மேலும் இந்த முறை தலா ரூ.7,000/-மும் அடுத்த முறை ரூ.5,000/-மும் கொடுங்க. அதற்கு பின் ஆர்டர் போட்டுட்டு அது பின்னாடி அப்ப பார்த்துக்கலாம் என்று சொன்னார். அதற்கு நான் வருமானம் இல்லை சார் என்று சொன்னேன். அதற்கு அவர் வருமானம் இருக்கோ இல்லையோ பணம் கொடுத்துதான் ஆகனும். புதுசா வந்தவங்க எல்லாம் கொடுக்கறாங்கில்ல என்று சொன்னார். நான் AC சாரை நேரில் பார்க்கிறேன் என்று சொன்னதற்கு, அதெல்லாம்

அவர் பார்க்க மாட்டார். அவர்தான் தெளிவாக ஏற்கனவே மீட்டிங்ல அப்பவே சொல்லீட்டார்தான, அதனால் பார்க்க மாட்டார் எதுவானாலும் எங்கிட்டதான் பேசச்சொல்வார். அதனால் பணத்தை ரெடிபண்ணிட்டு கூப்பிடுங்க என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். பின்னர் நான் குரல் பதிவு கருவியை லஞ்ச ஒழிப்பு போலிசாரிடம் கொடுத்துவிட்டேன். அவர்கள் தொடர்ந்து உதவி ஆணையர் திரு.ரமேஷ் மற்றும் செயல் அலுவலர் திரு.லட்சுமிகாந்தன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க விரும்பினால் நாமக்கல் லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம் வரும்படி கேட்டுக்கொண்டார்கள். 26.09.2022-ஆம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு செயல் அலுவலர் திரு.லட்சுமிகாந்தன் எனக்கு போன் செய்திருந்தார். அவரது missed call பார்த்துவிட்டு 12.30 மணிக்கு அவருக்கு நான் போன் செய்து பேசினேன். அப்போது அவர் கோவில் நிலம் ஏலம் குறித்து கேட்டார். பின்னர் பணம் என்னாச்சு என்று கேட்டார். நான் இன்னும் ஊருக்கு வரவில்லை என்று தெரிவித்தேன். பின்னர் நான் 5 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து பூஜை செய்பவர்களை நிரந்தரமாக்குவது குறித்து பேசிக்கொள்கிறார்களே என்று கேட்டேன். அவர் அதற்கு நம்ப கோவிலுக்கு வராது. எழுதி அனுப்பிச்சுதான் உத்தரவு வாங்க வேண்டும் என்று சொன்னார். தான் ஈரோட்டில் இருப்பதாகவும், மாலை கூப்பிடும்படி கூறினார். ஆகையால், நான் 26.09.2022-ஆம் தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு நாமக்கல் லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகம் வந்து காவல் ஆய்வாளரிடம், எனக்கு மாமூல் பணம் கொடுக்க விருப்பமில்லை என்றும், ஆகையால் AC திரு.ரமேஷ் அவர்களை சந்தித்து எங்களது பணி நிரந்தரமாக்குவது குறித்தும் EO சொன்ன மாத மாமூல் குறித்து கோவிலில் புரட்டாசி மாதம் என்பதால் கூட்டம் இல்லை என்றும், வருமானம் இல்லை என்றும் சொல்லி அவரது உத்தரவை கேட்கப்போவதாக தெரிவித்தேன். காவல் ஆய்வாளர் என்னிடம் அவ்வாறு AC திரு.ரமேஷ் அவர்களை சந்திக்கச் செல்லும்போது நடக்கும் உரையாடலை பதிவு செய்ய அறிவுறுத்தி அலுவலக குரல் பதிவு கருவியை ஆன் செய்து கொடுத்தனுப்பினார். நான் 26.09.2022 மதியம் சுமார் 01.45 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக துணை கட்டிடத்தில் இயங்கும் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அவர்களது அறையில் வைத்து அவரை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடமிருந்த செல்போனை வாங்கி ஆப் ஆகி உள்ளதா என்று பார்த்துவிட்டு அவரது டேபிள் மேல் வைத்துவிட்டு பேசினார். அப்போது அவரிடம் 5 வருடங்களுக்கு மேல்

பணிபுரிந்தவர்களுக்கு நிரந்தர பூசாரி நியமிப்பது குறித்து கேட்டேன். அவர் இன்னும் ஒரு மாதத்தில் எல்லோருக்கும் உத்தரவு பெற்றுத் தந்துவிடுவதாக தெரிவித்தார். மேலும் வேறு என்ன விசயம் என்று கேட்டார். நான் அவரிடம், மாத முறை பணம் மாமூலாக கொடுக்கச்சொன்ன பணம் போன முறைக்கு கொடுத்துவிட்டோம், இந்த மாதம் கோவிலில் கூட்டம் இல்லை, வருமானம் இல்லை என்று சொன்னேன். புரட்டாசி மாதம் என்பதால் கூட்டம் இல்லை என்று தெரிவித்தேன். அதற்கு AC திரு.ரமேஷ் அவர்கள் அப்படியா, வருமானம் குறைவாக இருந்தால் அதற்கு தகுந்தாற்போல் கொடுங்க என்று சொன்னார். நான் EO கிட்ட சொல்லிட்டா பரவாயில்லை என்று சொன்னேன். நான் EO கிட்ட சொல்லிடறேன் கொடுத்திடுங்க என்று சொன்னார். பின்னர் பகல் சுமார் 2.00 மணிக்கு நாமக்கல் லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம் வந்து காவல் ஆய்வாளர் அவர்களிடம் குரல் பதிவு செய்யும் கருவியை கொடுத்து நடந்த விபரங்களை தெரிவித்தேன். எனக்கு உதவி ஆணையர் திரு.ரமேஷ் மற்றும் செயல் அலுவலர் திரு.லட்சுமிகாந்தன் ஆகியோருக்கு எனது மற்றும் எனது பங்காளிகள் ஆகிய மூன்று பேருக்குரிய மாமூல் பணம் தலா ரூ.7,000/-வீதம் மொத்தம் ரூ.21,000/-ஐ லஞ்சமாக கொடுக்க விருப்பம் இல்லாததால் நாமக்கல் இலஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம் வந்து புகார் வாக்குமூலம் கொடுக்கிறேன். இன்று காவல் ஆய்வாளர் அவர்கள் என்னிடம் நடந்த விபரங்களை கேட்டு கணினியில் பதிவு செய்தார். படித்துப் பார்த்தேன், நான் சொன்னபடி சரியாக உள்ளது. இப்படிக்கு (ஒப்பம்/- (சை) S.அண்ணாதுரை) 26.9.22

மேற்கண்ட புகார் வாக்குமூலத்தை படித்துப்பார்த்தும், புகாரின் உண்மைத் தன்மை குறித்தும், வழக்கின் எதிரி-1 திரு.ப.ரமேஷ், உதவி ஆணையர், உதவி ஆணையர் அலுவலகம், இந்து சமய அறநிலையத்துறை, நாமக்கல் மற்றும் வழக்கின் எதிரி-2 திரு.லட்சுமிகாந்தன், செயல் அலுவலர், அருள்மிகு பெரியசாமி திருக்கோவில், புதுக்கோம்பை, நாமக்கல் மாவட்டம் ஆகியோர்களுக்கும் புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொண்டதில் எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில்

வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 27.09.2022-ஆம் தேதி காலை 08.30 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.2/AC/2022, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி மேற்படி எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் வாக்குமூலம், 1) புகார்தாரர் ஆஜர் செய்த Vivo 1907 மாடல் செல்போனிலிருந்து புகார்தாரருக்கும், எதிரி-2க்கும் இடையே 22.09.2022-ஆம் தேதி பகல் சுமார் 13.25 மணிக்கு நடந்த உரையாடல் அலுவலக கணினியில் பதிவிறக்கம் செய்து, பதிவேற்றம் செய்யப்பட்ட குறுந்தகடு ஒன்று, 2) புகார்தாரர் 24.09.2022-ஆம் தேதி அலுவலக குரல்பதிவு செய்யும் கருவி (Sony Voice Recorder)-உடன் சென்று எதிரி-2ஐ சந்தித்தபோது, புகார்தாரருக்கும், எதிரி-2க்கும் இடையே பகல் சுமார் 12.00 மணிக்கு நடந்த உரையாடல் அலுவலக கணினியில் பதிவிறக்கம் செய்து, பதிவேற்றம் செய்யப்பட்ட குறுந்தகடு ஒன்று, 3) புகார்தாரர் 26.09.2022-ஆம் தேதி அலுவலக குரல்பதிவு செய்யும் கருவி (Sony Voice Recorder)-உடன் சென்று எதிரி-1ஐ சந்தித்தபோது, புகார்தாரருக்கும், எதிரி-1க்கும் இடையே பகல் சுமார் 13.45 மணிக்கு நடந்த உரையாடல் அலுவலக கணினியில் பதிவிறக்கம் செய்து, பதிவேற்றம் செய்யப்பட்ட குறுந்தகடு ஒன்று மற்றும் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 65(B)(2)(d)-ன்படியான சான்றறிக்கைகள்-3 ஆகியவற்றை மாண்பமை தனிநீதிபதி/தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

(M. நல்லம்மாள்) 27/09/2022
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.